بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாரந்திர பத்திரிகை

# பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 36

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

9 ஸஃபர் 1438 ஹிஜ்ரி கமரி    10 நுபுவ்வத் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி    10 நவம்பர் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனக்கு எதிரில் உலகிலுள்ள எல்லா சமுதாயங்களும் ஒன்று சேர்ந்து எவருக்கு இறைவன் மறைவான செய்திகள் பற்றி தெரிவிக்கின்றான்? எவரது துஆக்களை அவன் ஏற்றுக் கொள்கின்றான்? எவருக்கு உதவி செய்கின்றான்? எவருக்காக பெரும் பெரும் அடையாளங்களைக் காட்டுகின்றான்? என்ற இந்த விஷயத்தில் என்னுடன் அவர்கள் போட்டி போடுகின்ற பரீட்சை நடைபெற்றால் அதில் நானே வெற்றி பெறுவேன் என்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந்த பரீட்சையில் என்னுடன் போட்டி போடுபவர் எவராவது இருக்கின்றாரா? இஸ்லாம் மார்க்கம் உண்மையானது என்பதை எதிரிகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் ஆயிரக்கணக்கான அடையாளங்களை இறைவன் எனக்கு வழங்கியுள்ளான். நான் எனது எந்தவொரு கண்ணியத்தையும் விரும்பவில்லை. மாறாக, எதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேனோ அதன் கண்ணியத்தையே நான் விரும்புகின்றேன்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

*கேள்வி (9) :* எந்த மக்கள் நல்லெண்ணத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக செயல்பட்டனரோ அல்லது செயல்படுகின்றனரோ அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது தூதுத்துவத்தை மறுத்து விட்டு ஓரிறைமையை ஏற்றுக் கொண்டு நற்செயல்களைச் செய்து தீய செயல்களில் இருந்து விலகியிருக்கின்றனரோ அவர்கள் தொடர்பாக என்ன கொள்கையை நாம் கொண்டிருக்க வேண்டும்?

*பதில் :* மனிதனின் நல்லெண்ணம் அவன் திருப்தி அடைவதன் மூலமே நிரூபிக்கப்படுகின்றது. இஸ்லாத்தை தவிர எந்தவொரு மதத்திலும் திருப்தி கிடைக்க முடியாது என்றிருக்கும்போது நல்லெண்ணத்திற்கான ஆதாரம் என்ன இருக்கின்றது? உதாரணமாக, கிறித்தவ மதத்தின் நிலை இதுவாகும். அதாவது, அவர்கள் வெளிப்படையாக ஒரு மனிதனை இறைவனாக்குகின்றனர். அதுவும் கடினமான துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்ற ஒரு மனிதனாக அவர் இருக்கின்றார். ஆரிய சமாஜத்தைச் சார்ந்தவர்கள் தங்களது பரமேஸ்வரரின் இருப்பிற்காக எந்த ஆதாரத்தையும் கொண்டு வரவில்லை. படைப்பினங்களைப் பார்ப்பதன் மூலமாகவே படைத்தவன் அடையாளங் கண்டு கொள்ளப்படுகின்றான். ஆனால், அவர்களது பார்வையில் அவர்களது பரமேஸ்வரன் படைத்தவன் அல்லன். மேலும், அவர்களின் மார்க்கத்தின் அடிப்படையில் இறைவனால் அற்புதங்களைக் காட்ட முடியாது. அற்புதங்கள் மூலமாக பரமேஸ்வரன் இருக்கின்றான் என்பதற்கான ஆதாரம் கிடைக்கும் வகையில் வேதத்தின் காலக்கட்டத்திலும் அவன் அற்புதங்களைக் காட்டவில்லை. எந்தப் பண்புகள் பரமேஸ்வருடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றனவோ உண்மையில் அவை அவனிடம் இருக்கின்றன என்ற விஷயத்திற்கு அவர்களிடம் எந்த ஆதாரமும் இல்லை. உதாரணமாக, மறைவான செய்திகளைப் பற்றிய அறிவு, அவன் கேட்கின்றான்; பேசுகின்றான். ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். தாராளமாக வழங்குபவனாக அவன் இருக்கின்றான் என்பதற்கான எந்த ஆதாரமும் அவர்களிடம் இல்லை. எனவே, அவர்களது பரமேஸ்வரன் ஒரு கற்பனையான பரமேஸ்வரனாக மட்டுமே இருக்கின்றான். இதுவே கிறிஸ்தவர்களின் நிலையாகும். அவர்களது இறைவனின் இல்ஹாம் (இறையறிவிப்பு) -ன் மீது கூட முத்திரை பதிக்கப்பட்டு விட்டது. எனவே, அத்தகைய பரமேஸ்வரன் அல்லது இறைவன் மீது நம்பிக்கை கொள்வதன் மூலம் எவ்வாறு திருப்தி அடைய முடியும்? எந்த நபருக்கு தனது இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைக்க முடியவில்லையோ அவர் அவன் மீது முழுமையாக எவ்வாறு அன்பு செலுத்த முடியும்? எவ்வாறு இணை வைத்தலிலிருந்து வெளியேற முடியும்? இறைவன் தன் தூதரான நபியே கரீம் (ஸல்) அவர்களின் அத்தாட்சிகளை நிறைவடையச் செய்வதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. அவர்கள் ஒரு சூரியனைப் போன்று வந்தார்கள். ஒவ்வொரு அம்சத்திலும் அவர்கள் தமது பிரகாசத்தை வெளிப்படுத்தினார்கள். எனவே, எந்த நபர் அந்த உண்மையான சூரியனை விட்டும் முகம் திருப்பிக் கொள்கின்றாரோ அவருக்கு அது நல்லது அல்ல. நாம் அவரை நல்லெண்ணம் கொண்டவர் என்று கூற முடியாது. எந்த நபர் தொழுநோயாளியாக இருக்கின்றாரோ, மேலும் தொழுநோய் அவரது உடல் உறுப்புகளைத் தின்று விட்ட நிலையில் நான் தொழுநோயாளி அல்லன் என்றோ அல்லது எனக்கு சிகிச்சையின் தேவை இல்லை என்றோ அவராலும் கூற முடியுமா? அவ்வாறு அவர் கூறினால் அவர் நல்லெண்ணம் கொண்டவர் என்று நம்மால் கூற முடியுமா? இதை தவிர முழுமையான நல்லெண்ணத்துடன் உலகைப் பெறுவதற்காக முயற்சி செய்வது போன்று இவ்வழியில் முழுமையாக முயற்சி செய்த பிறகும் இஸ்லாத்தின் உண்மை வரை எட்ட முடியாத அத்தகைய ஒரு நபர் உலகில் இருக்கின்றார் என்றால் அவரது கணக்கு இறைவனிடம் இருக்கின்றது. ஆனால், நாம் நமது முழு வாழ்நாளிலும் அத்தகைய எந்தவொரு மனிதரையும் பார்த்ததில்லை. எனவே, எந்தவொரு நபரும் அறிவு மற்றும் நீதியின் அடிப்படையில் வேறு ஒரு மார்க்கத்திற்கு இஸ்லாத்தை விட முன்னுரிமை வழங்குவார் என்பதை முற்றிலும் நடக்க முடியாத ஒன்றாகவே நாம் கருதுகின்றோம். அறிவற்ற மக்கள் தீமையைத் தூண்டும் ஆன்மா வழங்கிய போதனையின் காரணமாக ஓரிறைமை மட்டும் போதுமானதாகும். நபி கரீம் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டிய தேவை இல்லை என்ற இந்தவொரு விஷயத்தைக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால், ஓரிறைமையின் தாயாக நபிதான் இருக்கின்றான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் மூலமாகவே ஓரிறைமை உருவாகின்றது. இறைவனது இருப்பு பற்றி அந்த நபியின் மூலமாகவே நாம் தெரிந்து கொள்கின்றோம். இறைவனை விட அதிகமாக அத்தாட்சிகளை நிறைவடையச் செய்பவராக எவரை நாம் கருத முடியும்? அவன் தனது நபியே கரீமின் உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக விண்ணையும் மண்ணையும் அடையாளங்களால் நிரப்பி விட்டான். இப்போது இந்த காலத்திலும் கூட இறைவன் இந்த ஒன்றுமற்ற தொண்டனை அனுப்பி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். அவை மழை போல பொழிந்து கொண்டிருக்கின்றன. பிறகு அத்தாட்சிகளை நிறைவு செய்வதில் என்ன குறை எஞ்சியிருக்கின்றது? எந்த நபருக்கு எதிர்ப்பதற்கான அறிவு இருக்கின்றதோ அவர் ஏன் இதனை ஏற்றுக் கொண்டு இதற்கு உடன்படுவதற்கான வழியைப் பற்றி சிந்திக்க முடியாதவராக இருக்கின்றார்? எவர் இரவை பார்க்கின்றாரோ அவருக்கு ஏன் பிரகாசமான பகலில் பார்வை தெரியாமல் இருக்கின்றது? ஆனால், ஒன்றை பொய்ப்படுத்துவதற்கான வழியை விட அதனை உண்மைப்படுத்துவதற்கான வழி மிகவும் எளிதானதாகும். எனினும், எந்த நபர் அறிவு பறிக்கப்பட்டவர் போன்று இருக்கின்றாரோ, மனித ஆற்றல்களிலிருந்து குறைவான பங்கைப் பெற்றவராக இருக்கின்றாரோ அவரது கணக்கை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். அவரைப் பற்றி நாம் எதுவும் பேச முடியாது. அவர்கள் மிகக் குறைந்த வயதில் அல்லது சிறு வயதில் இறந்து விடுகின்ற மனிதர்களைப் போன்றவர்கள் ஆவர். ஆனால், தீங்கு விளைவிக்கின்ற பொய்ப்படுத்தக்கூடிய

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இன்று அல்லாஹ்வின் அருளால் கனடா அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. ஜல்ஸாவின் நோக்கம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண்பதாகும். ஆன்மீகத்தில் முன்னேற்றம் இல்லையென்றால் ஜல்ஸாவில் கலந்து கொள்வது பயனற்றதாகும்.**

**அஹ்மதிகளின் ஒரு பெரும் கூட்டம் ஜல்ஸாவிற்காக காதியான் செல்வது சாத்தியமில்லை. அதே போன்று எங்கு காலத்தின் கலீஃபா இருக்கின்றாரோ அங்கு அஹ்மதிகளின் ஒரு பெரும் கூட்டம் ஒன்று கூடுவதும் சாத்தியமற்றதாகும். உலகில் ஜமாஅத் பரவுவதற்கும், முன்னேற்றம் காண்பதற்கும் ஏற்ப அங்குள்ள ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த மட்டத்தில் ஜல்ஸா நடத்துவது அவசியமானதாகும். எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் நடந்ததோ அதுபோன்று நடத்தப்பட வேண்டும்.**

**ஒவ்வோர் அஹ்மதியும் மற்ற அஹ்மதியுடனான அன்பு மற்றும் சகோதரத்துவ தொடர்புகளில் முன்னேற வேண்டும். எந்த விஷயமும் தொடர்பில் விரிசல் ஏற்படுத்த முடியாத அளவிற்கு அந்தத் தொடர்பு உறுதியானதாகவும் வலிமையானதாகவும் இருத்தல் வேண்டும். அந்த தொடர்பு எந்நிலையிலும் முறிந்து விடக் கூடாது.**

**கனடா ஜமாஅத் இந்த நாட்டில் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை இந்த ஆண்டு கொண்டாடி வருகின்றது. கனடாவில் வசிக்கும் ஒவ்வோர் அஹ்மதியும், தான் அஹ்மதியான பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த உடன்படிக்கையை முழுமை செய்வதற்கு முயற்சி செய்யும்போதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் வைத்துள்ள எதிர்பார்ப்புகளை முழுமை செய்ய முயற்சி செய்யும்போதுதான் இவ்விஷயத்திற்கு முக்கியத்துவம் இருக்கும். இல்லையென்றால் ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் அல்லது அதை விட அதிகமான ஆண்டுகள் ஆனாலும் அதனால் என்ன வித்தியாசம் ஏற்படப் போகின்றது?**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பைஅத் வாங்கிய பிறகு நம்மை ஓர் உயர் தரத்தில் காண விரும்புகின்றார்கள். அந்த உயர் தரத்தை அடைவதற்கு முயற்சி செய்வதே ஜல்ஸாவின் நோக்கமும் ஆகும். எனவே, இதனை ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும்.**

**அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கங்களை முழுமை செய்யும் பணிகள் தொடர்கின்றன. ஜல்ஸாவின் இந்த தொடர் கூட அதன் ஓர் அங்கமே ஆகும்.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஜமாஅத் சகோதரர்கள் தங்களிடத்தில் தூய ஆன்மீக மாற்றங்களை உருவாக்குவதற்கு ஹுஸூர் அவர்கள் கூறியுள்ள மிகவும் முக்கியமான போதனைகள்.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **கனடாவிலுள்ள Mississauga -வில் அமைந்துள்ள International Centre -ல்**
**7 அக்டோபர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **7 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ.

இன்று அல்லாஹ்வின் அருளால் கனடா அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. அல்லாஹ்வின் அருளால் உலகிலுள்ள ஜமாஅத்துகள் ஒவ்வோர் ஆண்டும் தத்தமது நாட்டின் மாநாட்டை நடத்துகின்றன. ஏனென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாவிடமிருந்து கட்டளை பெற்று அதனை துவக்கி வைத்தார்கள். (ஆயினேயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 611) மேலும், வருடத்தில் மூன்று நாட்கள் காதியானில் ஒன்று கூடுங்கள் எனவும் அன்னார் கூறினார்கள். ஏதோ உலக திருவிழாவை நடத்துவதற்கோ அல்லது விளையாட்டு மற்றும் கேளிக்கைகளில் ஈடுபடுவதற்காகவோ அவர்கள் ஒன்று கூடுமாறு அன்னார் கூறவில்லை. உலக நோக்கங்களை அடைவதற்காக ஒன்று கூடுமாறு அன்னார் கூறவில்லை. மாறாக, மார்க்க அறிவில் முன்னேற்றம் ஏற்படவும், அறிவை பெருக்கிக் கொள்ளவும் ஒன்று கூட வேண்டும். மேலும் மஃரிஃபத் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக ஒன்று கூட வேண்டும். (ஆஸ்மானீ ∴பைஸலா. ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 351-352) மஃரிஃபத் என்பது என்ன? ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவைப் பெறுவது, அதன் ஆழத்தை அறிவது ஆகியவற்றிற்குப் பெயர்தான் மஃரிஃபத் ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த மஃரிஃபத்தில் முன்னேற்றம் காண வேண்டும் என்று விரும்பினார்கள் என்றால் வெறும் மேலோட்டமாக நாம் நம்மை முஸ்லிம் என்று வெளிப்படுத்தினால் போதாது அல்லது நாங்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று வெறும் கலிமா கூறக்கூடியவர்களாக நாம் இருந்தால் அது போதுமானதல்ல. மாறாக, நாம் நமது ஈமானில் முன்னேற்றம் காண வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று நீங்கள் கலிமா ஓதுகின்றீர்கள். அவ்வாறு ஓதுகின்ற நீங்கள் அல்லாஹ் யார்? அவன் நம்மிடம் என்ன விரும்புகிறான்? இறைவனுடைய கட்டளை என்ன? அதனை நாம் எவ்வாறு செயல்படுத்த வேண்டும்? அல்லாஹ்வின் கட்டளைகளை எவ்வாறு புரிய வேண்டும்? போன்ற விஷயங்களையும் தேடுங்கள்.

நாம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் ரஸூலாக ஏற்றுக் கொண்டுள்ளோம். அவ்வாறிருக்க அன்னாரது கட்டளைகளையும் அன்னாரின் சுன்னத்துகளையும் அறிந்து அதன்படி செயல்படும் வழிகளை நாம் தேட வேண்டும். (மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 83; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) அன்னாரின் வாழ்க்கை எப்படி இருந்தது? அதைப் பற்றிய ஞானம் எப்படி கிடைக்கும்? இந்த கேள்விகளுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அளித்த பதில் மற்ற எல்லா விளக்கங்களையும் விட மேலானதாகும். ஒருவர் அன்னாரிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அந்த நபரிடம் நீங்கள் திருக்குர்ஆன் ஓதவில்லையா எனக் கேட்டார்கள். திருக்குர்ஆன் என்ன கூறுகின்றதோ அதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் அதுவே அன்னாரது ஒவ்வொரு செயலின் விளக்கமாகும் என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 144-145 முஸ்னது ஹஸ்ரத் ஆயிஷா ஹதீஸ் 25108. பைருத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது) எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய இந்த ஞானத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு நம்பிக்கையாளரும் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு நாம் திருக்குர்ஆனை ஓதுவதும் புரிவதும் அவசியமாகும்.

அடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஜல்ஸாவின் நோக்கம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண்பதாகும். ஞானம் கிடைத்து விட்ட பிறகு அறிவுசார்ந்த விஷயங்களை மட்டுமே சார்ந்ததாக அந்த ஞானம் இருக்கக் கூடாது. மாறாக, ஆன்மீகம் மற்றும் செயல்களில் முன்னேற்றத்திற்கான காரணியாக அதனை மாற்ற வேண்டும். ஆன்மீகத்தில் முன்னேற்றம் இல்லையென்றால் ஜல்ஸாவில் கலந்து கொள்வது பயனற்றதாகும்.

அடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஜல்ஸாவின் இன்னொரு நன்மை என்னவென்றால், ஒருவர் மற்றவரின் அறிமுகத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். உங்களுக்கிடையேயான தொடர்புகள் அதிகரிக்க வேண்டும். அதற்காக நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

அறிமுகமாகி உலகவாதிகளைப் போன்று தற்காலிக தொடர்பு கொண்டவர்களாக மட்டும் நீங்கள் இருத்தல் கூடாது. மாறாக, ஒவ்வோர் அஹ்மதியும் மற்ற அஹ்மதியுடனான அன்பு மற்றும் சகோதரத்துவ தொடர்புகளில் முன்னேற வேண்டும். எந்த விஷயமும் தொடர்பில் விரிசல் ஏற்படுத்த முடியாத அளவிற்கு அந்தத் தொடர்பு உறுதியானதாகவும் வலிமையானதாகவும் இருத்தல் வேண்டும். அந்த தொடர்பு எந்நிலையிலும் முறிந்து விடக் கூடாது. (ஆஸ்மானீ ∴பைஸலா. ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 352)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இறையச்சத்தில் முன்னேறுங்கள். (ஷஹாதத்துல் குர்ஆன். ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 394) ஜல்ஸாவின் நோக்கங்களில் இது மிகவும் முக்கியமானதாகும். அது அல்லாமல் ஒரு நம்பிக்கையாளர் உண்மையான நம்பிக்கையாளராக முடியாது.

இறையச்சம் என்பது என்னவென்றால், பெற்றுக் கொண்ட அறிவிலும், அடைந்த ஆன்மீக முன்னேற்றத்திலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரிடம் ஏற்படுத்திய அன்பின் தொடர்பிலும், இனி நிரந்தரமாக நிலைபெற்றிருப்பதும், அதனை தொடர்ந்து உங்கள் வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்வதுமாகும். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்விஷயங்களுக்காகவே ஜல்ஸாக்களை நடத்தினார்கள். மேலும், இந்த நோக்கங்களை அடைவதற்காக ஒவ்வோர் ஆண்டும் காதியான் வருகை தாருங்கள் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சுயமாக கலந்து கொண்டு நேரடியாக ஜமாஅத்திற்கு அறிவுரை செய்து வந்த அந்த ஜல்ஸாக்கள் எவ்வளவு அருளுக்குரியவையாக இருந்தன? அன்னார் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் வழங்கி அவர்களின் ஆன்மீக தாகத்தைத் தணித்து வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பிறகு அவ்விஷயங்கள் அவ்வாறே நிகழ முடியாதுதான். ஏனென்றால் நபியின் அந்தஸ்து அவருக்கே உரியதாகும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும், இறைவனின் வாக்குறுதிக்கேற்பவும் அன்னார் தோன்றினார்கள். அல்லாஹ் அன்னாரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் மார்க்கத்தை உயிரூட்டுவதற்காக அனுப்பினான். எனவே, நிச்சயமாக அன்னார் தனக்கென ஓர் அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள். ஆனால், இதுவும் கூட அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று தனக்குப் பிறகு இரண்டாம் வல்லமையின் தோற்றம் வெளிப்படும் என அன்னார் கூறினார்கள். அது கிலாஃபத் எனும் அமைப்பாகும். பிறகு அவ்வாறே அது மலர்ந்தது. மேலும் அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கங்களை முழுமை செய்யும் பணிகள் தொடர்கின்றன.

ஜல்ஸாவின் இந்த தொடர் கூட அதன் ஓர் அங்கமே ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு கிலாஃபத் அமைப்பு காதியானில் மலர்ந்தது. இவ்வாறு கிலாஃபத்தின் முன்னிலையில் காதியானில் சுமார் 40 ஆண்டுகள் வரை அந்த மாநாடுகள் நடைபெற்றன. பின்னர் கிலாஃபத் பாகிஸ்தானிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு ரப்வாவில் மாநாடுகள் நடந்து வந்தன. அத்துடன் பல்வேறு நாடுகளில் ஜமாஅத்தின் முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது. ஒரு வகையில் காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பே வெளிநாடுகளில் ஜமாஅத்துகள் உருவாகியிருந்தன. குறிப்பாக ஆப்பிரிக்காவில் மிக உறுதி வாய்ந்த ஜமாஅத்துகள் உருவாகத் தொடங்கியிருந்தன. ஆனால் அதில் ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஒவ்வொரு புதிய நாளிலும், மாதத்திலும், ஆண்டிலும் பாகிஸ்தானுக்கு வெளியே ஜமாஅத்துகளில் அதிக முன்னேற்றம் ஏற்படத் துவங்கியது. எந்த அளவுக்கு என்றால் எதிரிகள் அதிக முன்னேற்றங்களைக் கண்டு அஹ்மதிகளுக்கு எதிரில் மிகவும் அநியாயமான சட்டங்களை அரசாங்கத்தின் மூலமாக உருவாக்கினார்கள். அதன் காரணமாக காலத்தின் கலீஃபாவிற்கு அங்கிருந்து ஹிஜ்ரத் செய்ய நேரிட்டது. மேலும் அத்துடன் அஹ்மதிகளின் ஒரு பெரும் எண்ணிக்கையும் அங்கிருந்து ஹிஜ்ரத் செய்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இலண்டன் ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு எங்கு இலண்டன் ஜல்ஸாக்கள் ஒரு புதிய வடிவத்தையும் விரிவாக்கத்தையும் பெற்றதோ அங்கு மற்ற நாடுகளின் ஜல்ஸாக்களிலும் ஒரு புதிய வடிவம் பிறந்தது. பிறகு அதில் அனுதினமும் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே சென்றது. இவ்வாறு இன்று எல்லா இடங்களிலும் ஜல்ஸாக்கள் ஒரு புதிய வடிவம் பெற்றுள்ளன. அஹ்மதிகளின் ஒரு பெரும் கூட்டம் ஜல்ஸாவிற்காக காதியான் செல்வது சாத்தியமில்லை. அதே போன்று எங்கு காலத்தின் கலீஃபா இருக்கின்றாரோ அங்கு அஹ்மதிகளின் ஒரு பெரும் கூட்டம் ஒன்று கூடுவதும் சாத்தியமற்றதாகும். உலகில் ஜமாஅத் பரவுவதற்கும், முன்னேற்றம் காண்பதற்கும் ஏற்ப அங்குள்ள ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த மட்டத்தில் ஜல்ஸா நடத்துவது அவசியமானதாகும். எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் நடந்ததோ அதுபோன்று நடத்தப்பட வேண்டும். அதாவது, வருடத்தில் ஒருமுறை மூன்று நாட்கள் நாம் நமது நிலைகளில் மாறுதலை ஏற்படுத்துவதற்காகவும் தர்பிய்யத் நோக்கங்களுக்காகவும் நம்மை ஒன்று கூடுமாறு அன்னார் கூறினார்கள்.

எனவே, இன்று நீங்கள் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துரைத்த அந்த நோக்கங்களை நிறைவேற்றவே இங்கு ஒன்று கூடியுள்ளீர்கள். ஒவ்வொரு வருடமும் நீங்கள் இந்த நோக்கங்களுக்காகவே ஒன்று கூடியுள்ளீர்கள். ஜமாஅத் உருவாகி இந்த ஆண்டுடன் 50 வருடங்கள் நிறைவடைந்து விட்டது. எனவே, அந்த அடிப்படையிலும் நீங்கள் ஒன்று கூடியுள்ளீர்கள். சிலருக்கு அதில் கருத்து வேறுபாடும் இருக்கலாம். எவ்வாறிருப்பினும், ஏதாவது ஓர் அளவுகோலை நிர்ணயிப்பது அவசியமாகும். ஜமாஅத்தின் Registration நடந்த ஆண்டை அளவுகோலாக நிர்ணயித்து 50 வருடங்களாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டில் அதற்கு முன்பே 1919 –ஆம் ஆண்டிலேயே முதல் அஹ்மதி வந்து விட்டதாக கூறப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், கனடா ஜமாஅத் இந்த நாட்டில் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை இந்த ஆண்டு கொண்டாடி வருகின்றது. அதன் காரணமாகவே அமீர் சாஹிபும் குறிப்பாக அழுத்தம் கொடுத்து என்னையும் அழைத்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் கனடா 50 ஆண்டு நிறைவு செய்வதையொட்டி இவ்வருடம் சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்துகின்றது. மேலும் அந்த அடிப்படையில் இந்த ஜல்ஸாவும் பெரிதாக இருக்கும் என நம்பப்படுகிறது. எனவே, நீங்களும் வருகை தாருங்கள் எனக் கூறி என்னை அழைத்தார்கள். நான் கூறியது போன்று காலத்தின் கலீஃபா வருகை தரும்போது மக்களும் அதிக அளவில் கலந்து கொள்வர். எனது வருகையின் காரணமாக வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான விருந்தினர்கள் வந்திருப்பர். மேலும் வந்து கொண்டும் இருப்பர். எவ்வாறிருப்பினும், இந்த நாட்டில் வசிக்கும் அஹ்மதிகளாகிய நீங்கள் இந்த வருடத்திற்கு சிறப்பான முக்கியத்துவம் வழங்குகின்றீர்கள். ஆனால் ஒவ்வோர் அஹ்மதியும் இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

கனடாவில் வசிக்கும் ஒவ்வோர் அஹ்மதியும், தான் அஹ்மதியான பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த உடன்படிக்கையை முழுமை செய்வதற்கு முயற்சி செய்யும்போதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் வைத்துள்ள எதிர்பார்ப்புகளை முழுமை செய்ய முயற்சி செய்யும்போது தான் இவ்விஷயத்திற்கு முக்கியத்துவம் இருக்கும். இல்லையென்றால் ஐம்பது ஆண்டுகள் ஆனாலும், 75 ஆண்டுகள் ஆனாலும் அல்லது அதை விட அதிகமான ஆண்டுகள் ஆனாலும் அதனால் என்ன வித்தியாசம் ஏற்படப் போகின்றது? நான் கூறியது போன்று பாகிஸ்தானில் உருவான சூழ்நிலையின் காரணமாக ஏராளமான அஹ்மதிகள் பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். உங்களில் பெரும்பான்மை இந்த ஹிஜ்ரத்தின் விளைவாகவே இங்கு வந்துள்ளது. நீங்கள் மார்க்க சுதந்திரத்தைப் பெறுவதற்காக ஹிஜ்ரத் செய்தீர்கள். மேலும் இங்குள்ள அரசாங்கமும் கூட நீங்கள் உங்களது மார்க்க போதனைகளுக்கேற்ப சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்பதற்காகவே உங்களுக்கு இந்த நாட்டில் குடியுரிமை வழங்கியுள்ளது. எனவே, இங்கு வசிக்கக் கூடிய ஒவ்வோர் அஹ்மதிக்கும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவேன் (மல்.ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 70; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) என்று அவர் செய்த உடன்படிக்கையுடன் இன்னொரு மிக முக்கிய கடமையும் உள்ளது. அது என்னவென்றால், எந்த நோக்கத்தை அடைவதற்கு நீங்கள் ஹிஜ்ரத் செய்தீர்களோ அதனைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

நாங்கள் இன்ன சூழ்நிலையில் பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்து இங்கு வந்தோம் என உங்கள் சந்ததிகளிடம் கூறுங்கள். இங்குள்ள நிலைமைகள் சிறப்பாக உள்ளன. எனவே, அதன் தேட்டம் என்னவென்றால், நாம் அல்லாஹ்வின் உண்மையான நன்றியுள்ள அடியார்களாகத் திகழ்ந்து அவனது கட்டளைகளின் படி செயல்படுபவர்களாக மாற வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த நேரத்தில் செய்த உடன்படிக்கைகளை முழுமை செய்யுங்கள். அதில் ஓர் உடன்படிக்கை என்னவென்றால், நான் திருக்குர்ஆனின் ஆட்சியை முழுமையாக என்னுள் நிலைபெறச் செய்வேன் (இஸாலே அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 564) என்பதாகும். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதனை எடுத்துக் கூறியுள்ளார்களோ அதனை கருத்தில் கொள்வது அவசியமாகும். ஏனென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட வேறு எவரும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளை சிறப்பாக புரிந்து கொள்ள முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தத் தரத்தின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்களோ அதனைப் பின்பற்றி நாம் மார்க்க கட்டளைகள் மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளை மேலும் சிந்தித்துப் பார்த்து நமது அறிவிற்கு ஒளியூட்டி மூளையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு எண்ணற்ற அறிவுரைகளைச் செய்துள்ளார்கள். அவை அறிவிலும், செயலிலும் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பைஅத் வாங்கிய பிறகு நம்மை ஓர் உயர் தரத்தில் காண விரும்புகின்றார்கள். அந்த உயர் தரத்தை அடைவதற்கு முயற்சி செய்வதே ஜல்ஸாவின் நோக்கமும் ஆகும். எனவே, இதனை ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். இப்போது உங்களில் பலர் ஜல்ஸாவிற்கு வந்து விட்டனர். ஆனால் ஒருவேளை அவர்கள் முழு கவனத்துடன் கேட்காமல் இருக்கலாம். சிலர் பயணத்தின் காரணமாக களைப்படைந்து இப்போது கண் அயர்ந்து கூட இருக்கலாம். அவர்கள் அனைவரிடமும் நான் கூறுகிறேன். நான் தற்போது எடுத்துரைக்கும் இவ்விஷயங்களை மிகக் கவனத்துடன் கேளுங்கள். கவனத்தை நிலைநிறுத்தி சுய நினைவுடன் அமர்ந்து கேட்பதற்கு முயற்சி செய்யுங்கள். அரை மணி நேரம் அல்லது 40 நிமிடங்கள் பொறுமையாக அமர்ந்து கேட்பது ஒன்றும் மனிதனுக்கு கடினமான காரியமல்ல. நான் கூறுகின்ற விஷயங்களையும் மற்ற சொற்பொழிவாளர்கள் தத்தமது சொற்பொழிவில் கூறும் அனைத்து விஷயங்களையும் நீங்கள் மிகக் கவனத்துடன் கேட்கும்போதுதான் நீங்கள் ஜல்ஸாவிற்கு வருகை தந்த நோக்கமும் நிறைவேறும். ஏராளமான விஷயங்கள் ஈமானை அதிகரிக்கக் கூடியவையாகவும், ஆன்மீகத்தில் முன்னேற்றமடையச் செய்பவையாகவும் உள்ளன. தற்காலிகமாக நாரே முழக்கமிட்டு மகிழ்வது மட்டும் போதுமானதல்ல. நீங்கள் அவற்றை உங்களின் வாழ்வின் அங்கமாகவும் மாற்றுங்கள். நான் கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில கூற்றுகளை அன்னாரின் சொற்களிலேயே உங்கள் முன்

எடுத்துரைப்பேன். அதன் மூலம் அன்னாரின் கூற்றுகள் உங்களின் செவிகளில் பட்டு உங்களின் இதயங்களிலும் மூளைகளிலும் தங்கி விடும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் விரும்பும் ஆன்மீக மாறுதல்களும் உருவாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பலமுறை எனது ஜமாஅத்திற்கு கூறி விட்டேன். நீங்கள் என்னிடம் செய்த பைஅத்தின் மீது மட்டும் நம்பிக்கை வைக்காதீர்கள். நீங்கள் அதன் உண்மை வரை சென்றடையாத வரை உங்களுக்கு இரட்சிப்பு கிடைக்காது. எனக்கு பழத்தின் தோல் கிடைத்து விட்டது என்று நீங்கள் மகிழ்ச்சி அடைந்தால் அது பயனற்ற வீணான காரியமாகும். நீங்கள் கனியை இழந்து நிற்பீர்கள். பழத்தைப் பெறுவதற்கு முயல்பவரே அறிவுடையவர் ஆவார். தோல் போதுமெனக் கருதுபவர் அறிவாளி அல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: சீடர் செயல்படுபவராக இல்லையென்றால் அவரது குருவின் மேன்மை சீடருக்கு எவ்வகையிலும் பயனளிக்காது. அதாவது நீங்கள் பைஅத் செய்த பிறகு, உங்களின் செயல் நிலைகளை நீங்கள் சரி செய்யவில்லையென்றால் அது பயனளிக்காது. இன்னும் சொல்வதென்றால், நான் யாரை ஏற்றுக் கொண்டுள்ளேனோ அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடைந்தால் அது எவ்வகையிலும் பயனளிக்காது. அல்லாஹ்வின் தூதரின் கண்ணியம் அது வேறு விஷயமாகும். அது சரிதான். ஆனால் அந்த தூயவரின் மூலமாக சீடர்களுக்கு எப்போது பயனளிக்கும் என்றால் சீடர்கள் அவரின் கூற்றுகளுக்கேற்ப செயல்படும்போதுதான் பயன் கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுத்து அந்த மருந்தை நோயாளி உண்ணாமல் கையில் வைத்துக் கொண்டால் அது ஒருபோதும் அவருக்கு பயனளிக்காது.

என்ன மருந்து எழுதிக் கொடுக்கப்பட்டதோ அதை வாங்கி அருந்தும் போதுதானே பயன் கிடைக்கும். அது அல்லாமல் அவர் சுயமாக தன்னை இழப்பிற்குரியவராக ஆக்கிக் கொள்கிறார். மருந்தை வாங்கி விட்டார். ஆனால் அதை பயன்படுத்தாமல் தன்னைத்தானே இழப்பிற்குரியவராக ஆக்கிக் கொள்கிறார்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰهَا எவர் இறையச்சத்தை வளர்த்துக் கொண்டாரோ அவர் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டார். ஆயிரக்கணக்கான திருடர்கள், விபச்சாரம் செய்தவர்கள், தீயவர்கள், குடிகாரர்கள், கயவர்கள் தம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர்களாக வாதிடுகின்றனர். ஆனால், அவர்கள் தமது வாதத்தில் உண்மையாளர்களா? ஒருபோதும் இல்லை. எவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகளின்படி முழுமையாகச் செயலாற்றுகின்றரோ அவரே அன்னாரின் உம்மத்தைச் சார்ந்தவராவார். (மல்.'.பூஸாத் தொகுதி 4 பக்கம் 232-233; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறிதோரிடத்தில் பைஅத்தின் தரத்தைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: அதேபோன்று, பைஅத் மற்றும் ஈமான் கொண்டதாக வாதிடுபவர் தமது நிலையை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நான் வெறும் சக்கையாக உள்ளேனா அல்லது சாறாக உள்ளேனா என அவர் பார்க்க வேண்டும். அந்த உயிரோட்டம் இல்லாதவரை அல்லது சாறை பெற்றுக் கொள்ளாத வரை ஈமான், அன்பு, கட்டுப்படுதல், பைஅத், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் இவை அனைத்தும் உண்மையாளராக உங்களை ஆக்கி விடாது. நினைவில் கொள்ளுங்கள். சாறின்றி வெறும் சக்கைக்கு அல்லாஹ்வின் பார்வையில் எந்த மதிப்பும் கிடையாது. மரணம் எப்போது வரும் என்பது தெரியாது. ஆனால், மரணம் நிச்சயம் என்பது உறுதியான விஷயமாகும். எனவே, என்னை ஏற்றுக் கொண்டு விட்ட விஷயத்தை மட்டும் போதுமானதாக ஒருபோதும் கருதாதீர்கள். அதில் மகிழ்ச்சி அடைந்து விடாதீர்கள். அது ஒருபோதும் பயனளிக்காது. மனிதன் தன்னுள் ஏராளமான மரணத்தை ஏற்படுத்திக் கொள்ளாத வரை ஏராளமான மாற்றங்கள் மற்றும் புரட்சிகளைக் கடந்து வெளியில் வராத வரை அவரால் மனிதத்துவத்தின் அசல் நோக்கத்தை அடைய முடியாது. (மல்.'.பூஸாத் தொகுதி 2 பக்கம் 167; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இந்த மரணங்கள் என்பது என்ன? அது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குதல் ஆகும். உலகின் ஆடம்பரங்கள், சுகபோகங்கள் இந்த நாடுகளில் குறிப்பாக கண்முன் உள்ளது. அல்லாஹ்வின் வழியிலிருந்து அகற்றுவதற்கு அவை ஆயத்தமாக உள்ளன. இந்த உலக விஷயங்களிலிருந்து தப்பிப்பதே மரணமாகும்.

இப்போது உலகின் நிலையைப் பாருங்கள். நமது நபி (ஸல்) அவர்கள் தமது செயலால் தனது வாழ்வும், மரணமும் அல்லாஹ்வுக்கே உரியது என நிரூபணம் செய்தார்கள். இன்று உலகிலுள்ள முஸ்லிம்களிடம் நீங்கள் முஸ்லிமா? என கேட்கப்பட்டால் அவர்கள் உடனே ஆம்! அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறுகின்றனர். அவர்கள் எவருடைய கலிமாவை கூறுகின்றார்களோ அவரின் வாழ்க்கை அனைத்தும் இறைவனுக்காகவே இருந்தது. ஆனால் இவரோ உலகிற்காகவே வாழ்கின்றார். உலகிற்காகவே மரணிக்கின்றார். மரணப்படுக்கையில் படுத்து இறுதி நேரம் வரும் வரை உயிர் பிரியும் வரை உலகிற்காகவே வாழ்கின்றார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வெறும் மகிழ்ச்சி அடைவது புத்திசாலியின் பணியல்ல. ஒரு யூதரிடம் நீ முஸ்லிம் ஆகி விடு என ஒரு முஸ்லிம் கூறினார். அதற்கு அவர் நீ முஸ்லிம் ஆவாய் என மகிழ்ச்சி அடையாதே! நான் எனது ஆண் பிள்ளைக்கு காலிது (நீடித்த ஆயுள் கொண்டவர்) என பெயர் வைத்தேன். ஆனால் மாலை நேரத்திற்கு முன்பாகவே அவனை மண்ணில் புதைத்து விட்டு வந்திருக்கிறேன். காலித் எனப் பெயர் வைத்ததால் அவருக்கு நீண்ட ஆயுள் கிடைத்து விட்டதா? வாழ்நாள் அதிகரித்து விட்டதா என்ன? மாலையிலேயே தனது ஆண் குழந்தை இறந்து விட்டதாக அவர் கூறுகிறார்.

எனவே, உண்மையைத் தேடுங்கள். வெறும் பெயரில் திருப்தி கொண்டு விடாதீர்கள். மனிதன் மகத்துவமிக்க நபியின் உம்மத்தைச் சார்ந்தவராக வாதம் செய்து, காஃபிர்களைப் போன்று வாழ்வைக் கழிப்பது எவ்வளவு வெட்கக் கேடான விஷயமாகும். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்துங்கள். அதே நிலையை உருவாக்குங்கள். (மல்.'.பூஸாத் தொகுதி 2 பக்கம் 187; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒருமுறை சில நபர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார்கள். பிறகு பைஅத்தும் செய்தார்கள். பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவர்களுக்கு சில அறிவுரைகள் செய்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: பைஅத் செய்து இந்த ஜமாஅத் உண்மையானது என்று மட்டும் ஏற்றுக் கொண்டால் அது மனிதனுக்கு போதுமானதல்ல. இந்த அளவில் ஏற்றுக் கொள்வதினால் மட்டும் அவருக்கு பரகத் கிடைத்து விடாது. நல்லவர்களாகவும், இறையச்சமுடையவர் –களாகவும் மாறுங்கள்.

இந்நேரம் துஆவிற்குரிய நேரமாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் ஈமானுடன் நற்செயல்களையும் குறிப்பிட்டுள்ளான். எந்த செயலில் அணுவளவும் குழப்பம் இருக்காதோ அதனையே அமலே ஸாலிஹ் என்று கூறுகிறோம். நினைவில் கொள்ளுங்கள். மனிதனின் செயல்களுடன் எப்போதும் திருடன் ஒளிந்திருக்கின்றான். அது என்ன? அது காட்டுதல் ஆகும். அதாவது மனிதன் பிறருக்கு காட்டுவதற்காக செயல்படுவதாகும். ஒரு செயலைச் செய்து விட்டு நான் இன்ன பணியைச் செய்து விட்டேன் என அவன் தனக்குள்ளேயே மகிழ்ச்சி கொள்கின்றான். பலவகையான தீமைகளும் பாவங்களும் அவனிடம் வெளிப்படுகின்றன. அதன் மூலம் அவனது செயல்கள் பொய்யாகி விடுகின்றன. எவ்வகை அநீதியும், காட்டுதலும், ஆணவமும் மற்றும் பிறரின் உரிமைகளைப் பறிக்கும் எண்ணமும் இல்லாத செயல்களே நற்செயல்கள் ஆகும். குடும்பத்தில் ஒரு மனிதராவது நற்செயல் செய்பவராக இருந்தால் அதனால் முழு குடும்பமும் பாதுகாக்கப்படும். எதுவரை உங்களிடம் நற்செயல்கள் இல்லையோ அதுவரை நம்பிக்கை கொள்வது பயனளிக்காது. ஒரு மருத்துவர் மருந்து எழுதிக் கொடுப்பதன் பொருள் என்னவென்றால், அந்த மருந்தை வாங்கி அருந்த வேண்டும். அவ்வாறல்லாமல் மருந்தை வாங்கி வைத்துக் கொள்வதால் என்ன பயன் ஏற்படும்?

இப்போது நீங்கள் இந்த பைஅத்தின் மூலம் தவ்பா செய்துள்ளீர்கள். இப்போது நீங்கள் உங்களை இந்த தவ்பாவின் மூலம் எவ்வளவு தூய்மைப்படுத்திக் கொண்டீர்கள் என இறைவன் உங்களைப் பார்க்க விரும்புகின்றான். இறைவன் தவ்பாவின் மூலம் பிரித்தறிய விரும்பும் காலமாக இந்தக் காலம் உள்ளது. பலர்


## சுத்தமான தேன் கிடைக்கும்

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். **Ph : +91 98437 22215**

இறைவன் மீது புகார் செய்கின்றனர். அவர்கள் தனது நஃப்ஸை பார்ப்பதில்லை. மனிதன் தனது ஆன்மாவிற்கே அநீதியிழைத்துக் கொள்கின்றான். இறைவனோ மிக மன்னிக்கக் கூடியவனாகவும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனாகவும் இருக்கின்றான். மனிதன் சில இழப்புகளை சந்திக்கின்றான் என்றால் அது அவன் தன் மீது இழைத்துக் கொள்ளும் அநீதியினாலேயே ஏற்படுகின்றது. அல்லாஹ் எவர் மீதும் அநீதியிழைப்பதில்லை. அவன் மிகவும் மன்னிப்பவனும் கருணையாளனும் ஆவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: சிலர் இருக்கின்றனர். அவர்களுக்கு தாம் செய்வது பாவம் என்பது தெரிகிறது. ஆனால் வேறு சிலர் இருக்கின்றனர். அவர்களுக்கு தாம் செய்வது பாவமாகவே தெரிவதில்லை. அந்த அளவுக்கு அவர்கள் பாவம் செய்யும் பழக்கமுடையவர்களாக ஆகி விடுகின்றனர். எனவேதான் அல்லாஹ் எப்போதும் இஸ்திக்ஃபார் செய்யுமாறு கூறியுள்ளான். இஸ்திக்ஃபார் மிக அதிகமாக செய்ய வேண்டும். குறிப்பாக இந்த நாட்களில் செய்ய வேண்டும். எங்கு ஸலவாத் ஓதுவீர்களோ அங்கு இஸ்திக்ஃபாரும் அதிகமாக செய்யுங்கள். பாவம் வெளிப்படையானதாக இருந்தாலும், மறைவானதாக இருந்தாலும் பாவத்தை அவர் அறிந்திருந்தாலும் அறியா விட்டாலும் அவர் பாவமன்னிப்புக் கோரட்டும். நாவு, கண், காது, கை உட்பட அனைத்து உறுப்புகளும் செய்த பாவங்களுக்காக இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருங்கள்.

இன்றைய காலத்தில் ஆதம் (அலை) அவர்கள் செய்த துஆவை செய்ய வேண்டும்.

رَبَّنَا ظَلَمْنَا أَنْفُسَنَا وَإِنْ لَمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ

எங்கள் இறைவா! நாங்கள் எங்கள் ஆன்மாவின் மீது அநீதியிழைத்து விட்டோம். நீ எங்களை மன்னிக்கா விட்டால், எங்கள் மீது கருணை காட்டா விட்டால் நாங்கள் அநீதியிழைப்பவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம்.

இந்த துஆ ஆரம்பத்திலேயே ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. அல்லாஹ் இந்த துஆவை கற்றுக் கொடுத்தபோதே அது ஏற்றுக் கெள்ளப்பட்டு விட்டது. கவனக் குறைவாக வாழ்க்கையைக் கழிக்காதீர்கள். ஒப்புக் கொள்ளப்படுவதற்காகவே துஆ கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மிகக் கவனத்துடன் இந்த துஆவை செய்ய வேண்டும். எவர் கவனக்குறைவிலிருந்து விலகி விழிப்புடன் வாழ்க்கையை கழிப்பாரோ, ஒருபோதும் கவனக்குறைவில்லாமல் வாழ்க்கையை கழிக்கின்றாரோ அவர் துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த துன்பமும் இறங்காது.

எனக்கு இல்ஹாம் மூலமாக இந்த துஆ கற்றுத் தரப்பட்டது.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِي وَانْصُرْنِي وَارْحَمْنِي

இந்த துஆவையும் தற்போது அதிகம் செய்ய வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 274-276; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சபையில் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் கூறினார்கள்: ஹுஸூர்! சகோதர ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பற்றியும் சிறிது கூறுங்கள். அப்போது அன்னார் சில அறிவுரைகளைச் செய்தார்கள். அதன் சில பகுதிகளை இங்கு நான் எடுத்துரைக்கிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இரண்டு விஷயங்களையே கொண்டு வந்துள்ளேன். ஒன்று, ஏகத்துவத்தை மேற்கொள்வது, இரண்டாவது, ஒருவருக்கொருவர் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்வது ஆகும். அந்நியர்களுக்கு அற்புதமாகத் தென்படுகின்ற முன்மாதிரிகளை வெளிப்படுத்துங்கள். நபித்தோழர்களிடம் இந்த விஷயமே உருவானது.

كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ நினைவில் கொள்ளுங்கள். உள்ளங்கள் ஒன்றுபடுவது ஓர் அற்புதமாகும். தமக்காக விரும்புகின்றவற்றை தமது சகோதரருக்காகவும் விரும்புபவராக ஆகாத வரை நீங்கள் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக ஆக முடியாது. பகைமை விலகுவது மஹ்தியின் அடையாளம் ஆகும். அதாவது மஹ்தியின் வருகையின் மூலமாக சகோதரர்களுக்கிடையில் பகைமை விலகி விடும். அந்த அடையாளம் நிறைவேறாமல் போய் விடுமா? கண்டிப்பாக நிறைவேறும். நீங்கள் ஏன் பொறுமை காட்டுவதில்லை. சில நோய்களை முற்றிலும் நீக்காத வரை முழுமையான உடல்நலம் கிடைக்காது என்பது மருத்துவ தத்துவமாகும். அதுபோன்று என் மூலம் ஒரு நல்லடியார்களின் ஜமாஅத் உருவாகும். சகோதரர்களுக்கிடையேயான பகைமைக்கான காரணம் என்ன? கருமித்தனம், ஆணவம், சுயநலம் போன்றவையாகும். நிச்சயமாக நல்லடியார்களைக் கொண்ட ஒரு ஜமாஅத் கண்டிப்பாக உருவாகும். தற்போது உலகில் பெரிய பெரிய தூய அடியார்கள் உருவாகி வருகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எவர்களால் தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதோ, சகோதரர்களுடன் அன்புடனும் நேசத்துடனும் பழக முடியாதோ அப்படிப்பட்டவர்கள் நினைவில் கொள்ளட்டும். அவர்கள் சில நாள் விருந்தாளிகளே ஆவர். நான் எவரின் காரணமாகவும் பழிக்கு ஆளாக விரும்பவில்லை. அதுபோன்ற நபர் எனது ஜமாஅத்தில் இருந்து கொண்டு எனது விருப்பத்திற்கேற்ப செயல்படவில்லையென்றால் அவர் காய்ந்த கிளையைப் போன்றவர் ஆவார். அதனை தோட்டத்தின் முதலாளி துண்டிக்காமல் வேறென்ன செய்வார்?

காய்ந்த கிளை பசுமையான மற்ற கிளைகளுடன் இருந்து தண்ணீரை உறுஞ்சுகிறது. ஆனால், அது அதனை பசுமையாக்க முடியாது. இன்னும் சொல்லப் போனால், அது மற்ற கிளைகளையும் நாசமாக்கி விடும். எனவே, அஞ்சுங்கள். எவர் தன்னை சீர்படுத்திக் கொள்ள மாட்டாரோ அவரால் என்னுடன் இருக்க முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 48-49; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இது எவர்கள் தங்களுக்குள் பிணக்குகளை அதிகரிக்கின்றார்களோ அவர்கள் அஞ்ச வேண்டிய இடமாகும். இது மிகவும் அச்சத்திற்குரிய நிலையாகும். நாம் இக்காலத்தில் நமது சிகிச்சைக்காக வந்த நபரை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறிருக்க, நாம் அவரின் கூற்றின்படி செயல்படுவது அவசியமாகும்.

மனிதத்துவத்தைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்குகின்றார்கள். மனிதத்துவம் என்பது என்ன? மனிதத்துவத்தின் தரம் என்ன? ஒரு முஃமின் எப்படி இருக்க வேண்டும்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உன்ஸான் (இரு அன்புகள்) – மனிதன் என்ற சொல் உன்ஸ் என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது. எவரிடம் இரண்டு விஷயத்தில் உண்மையான அன்பும் தொடர்பும் இருக்குமோ அதாவது ஒன்று, அல்லாஹ்வுடனான அன்பு, மற்றொன்று அவனது படைப்பினங்களின் மீதான அனுதாபம் ஆகும். இந்த இரண்டு அன்பும் அவனிடம் உருவாகும்போதுதான் அவன் மனிதன் என்று அழைக்கப்படுவான். இதுதான் மனிதத்துவத்தின் உயிரோட்டமாகும். இரண்டு தொடர்புகளை அதாவது ஒன்று, இறைவன் உடனான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். மற்றொன்று சக மனிதர்களுடனான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே மனிதத்துவத்தின் சாராம்சமாகும். இந்த நிலையிலேயே மனிதன் அறிவுடைய மனிதன் என்று அழைக்கப்படுகின்றான். எதுவரை இந்நிலையை மனிதன் அடையமாட்டானோ அதுவரை மற்ற அனைத்தும் வீணானவையாகும். அவன் ஆயிரம் வாதங்கள் செய்தாலும் அல்லாஹ்வின் பார்வையிலும் மலக்குகள் மற்றும் அவனது தூதரின் பார்வையிலும் அவை வீணானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 168; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் உலகப் பணிகளைச் செய்வதிலிருந்தும் மனிதனை தடுக்கவில்லை. மாறாக, சோம்பேறியாக இருக்காதீர்கள். பணிகளைச் செய்யுங்கள் என கட்டளையிட்டுள்ளான். ஆனால், நோக்கம் உலகமாக இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் திருப்தியை நோக்கமாகக் கொண்டே செயல்பட வேண்டும். இதை எப்போதும் கண்முன் நிறுத்திக் கொள்ள வேண்டும். எங்கு உலகத்தின் அருட்கொடைகளைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றதோ அங்கு மறுமையின் அருட்கொடைகளைப் பெறுவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

இந்தக் கருத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இந்த துஆவை மனிதனுக்கு கற்றுத் தந்துள்ளான். رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً இதிலும் கூட உலகத்தை முதலில் வைத்துள்ளான். ஆனால், அது எந்த உலகத்தை என்றால் மறுமையின் அழகிற்கு காரணமாக இருக்கின்ற உலகத்தையே முதன்மையாக வைத்துள்ளான். இந்த துஆவின் போதனையிலிருந்து தெளிவாக மனிதனுக்கு புரிகின்றது. மறுமையின் அழகை பெற்றுத் தருகின்ற உலகை சம்பாதிப்பதையே மனிதன் கருத்தில் கொள்ள வேண்டும். *ஹஸனத்துத் துன்யா* என்ற சொல்லில் ஒரு முஃமின் முஸ்லிம் உலகில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து விஷயங்களும்

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**

ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.

Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

இடம் பெற்று விட்டன. எந்த விஷயங்கள் மற்றும் வழிமுறைகள் மூலமாக நன்மையும் பயனும் கிடைக்குமோ அந்த வழிகளில் உலகத்தை சம்பாதித்துக் கொள்ளலாம்.

எனவே, உலகத்தை சம்பாதிப்பது தடை செய்யப்படவில்லை. ஆனால் நன்மைக்காகவும் நன்மையான வழிகளிலும் அதனை சம்பாதிக்க வேண்டும். பிறருக்கு சேதத்தை ஏற்படுத்தி உலகத்தை சம்பாதிக்கக் கூடாது. பிறரின் உரிமைகளைப் பறித்தும், பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்தியும் உலகை சம்பாதித்தல் கூடாது. மனித இனத்திற்கு எவ்வகையிலும் துன்பத்தை ஏற்படுத்தி பிறரின் பொருளை அபகரித்து உலகை சம்பாதித்தல் கூடாது. இதுவே ஹஸனத்துத் துன்யா ஆகும். அப்படிப்பட்ட உலக சம்பாத்தியம் மறுமையின் அழகிற்கும் காரணமாக அமையும். (மல்.ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 91-92; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இதுபோன்ற உலகச் செல்வங்களைச் சம்பாதிக்கக் கூடியவர்கள் அல்லாஹ்விற்காகவும் அவனது படைப்பினங்களுக்காகவும் அவனது மார்க்கத்திற்காகவும் செலவு செய்யக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் என்னுடைய போதனைகளை தனது செயல் திட்டங்களாக ஆக்கிக் கொள்கின்றாரோ அவரே எமது ஜமாஅத்தில் நுழைந்தவர் ஆவார். அவர் தனது தகுதி மற்றும் ஆற்றலுக்கேற்ப முயற்சியும் செய்பவராக இருப்பார். வெறும் பெயரைச் சூட்டிக் கொண்டு எமது போதனைகளுக்கேற்ப செயல்படவில்லை என்றால் அவர் நினைவில் கொள்ளட்டும். அல்லாஹ் இந்த ஜமாஅத்தை சிறப்பான ஒரு ஜமாஅத்தாக ஆக்க எண்ணம் கொண்டுள்ளான். எந்தவொரு மனிதரும் உண்மையான பொருளில் ஜமாஅத்தில் இணையாத வரை வெறும் பெயர் எழுதப்பட்டு விடுவதனால் இந்த ஜமாஅத்தை சார்ந்தவராக ஆகிவிட மாட்டார். அதாவது, உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின்படி செயல்படவில்லை என்றால் வெறும் பெயர் எழுதப்படுவதனால் அவர் அஹ்மதியாகி விட மாட்டார். ஏதாவதொரு நேரம் வரும். அந்நேரத்தி அவர் நம்மை விட்டு விலகி விடுவார்.

எனவே முடிந்தவரை நமது போதனைகளுக்கேற்ப உங்களது செயல்களை ஆக்கிக் கொள்ளுங்கள். செயல்கள் இறக்கைகளைப் போன்றதாகும். செயல்கள் எனும் இறக்கைகள் இன்றி மனிதனால் பறக்க முடியாது. எவ்வாறு பறவைகள் தமது இறகைகளால் பறக்கின்றனவோ அதுபோன்று மனிதன் செயல்களால் ஆன்மீக உலகில் பறக்கின்றான். பறவைகளுக்கு அறிவு இருக்கின்றது. அந்த அறிவு இல்லையென்றால் அந்த பறவைகளிடமிருந்து எந்தப் பணிகள் செய்யப்படுகின்றனவோ அவை நடைபெற முடியாது. உதாரணமாக, தேனீக்களிடம் அறிவு இல்லையென்றால் அது தேனை உருவாக்க முடியாது. அதே போன்று புறாக்கள் இருக்கின்றன. புறாக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு கடிதங்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

பாருங்கள். அந்தப் பறவைகள் எந்த அளவுக்கு தனது அறிவைப் பயன்படுத்துகின்றன. மிகத் தொலை தூர இடங்களுக்கு பறக்கின்றன. கடந்த காலங்களில் இந்தப் பணிகளுக்கு புறாக்களையே பயன்படுத்தினர். கடிதங்களைக் கொண்டு சேர்த்தனர். அதேபோன்று பறவைகளின் மூலம் பல அறிய பணிகள் செய்யப்படுகின்றன. எனவே, முதலில் மனிதன் தனது அறிவைப் பயன்படுத்த வேண்டும். சிந்திக்க வேண்டும். நான் எந்தப் பணியைச் செய்ய இருக்கின்றேனோ அது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு உட்பட்டதாகவும் அவனது திருப்திக்குரியதாகவும் உள்ளதா? இல்லையா? என ஆராய வேண்டும். எனவே, ஒவ்வொரு பணியைச் செய்வதற்கு முன்பும் இதை சிந்திக்க வேண்டும். நான் என்ன பணியைச் செய்யவுள்ளேனோ அதற்கு மார்க்கம் அனுமதிக்கின்றதா? இல்லையா? எனப் பார்க்க வேண்டும். அல்லாஹ் அதை அனுமதிக்கின்றானா? என சிந்திக்க வேண்டும். அவ்வாறு அல்லாமல் உலகத்தை சம்பாதிப்பதற்காக அனுமதியில்லாத எல்லாவித வழிமுறைகளையும் மேற்கொள்ளக் கூடாது. இவ்வாறு சிந்தித்து அறிவைப் பயன்படுத்தி செயல்படுவது அவசியமாகின்றது. எவ்வகையிலும் சோம்பேறித்தனம் காட்டக் கூடாது. கவனக்குறைவாக இருக்கக் கூடாது. ஆயினும், போதனை சரியானதா என்பதைப் பார்க்க வேண்டும். போதனை சரியானதாக இருந்தாலும் மனிதன் தனது அறியாமையினால் அல்லது பிறரின் விஷமத்தால் தவறான விளக்கத்தால் ஏமாற்றுதலுக்கு ஆளாகி விடுகின்றான். எனவே, எப்போதும் நடுநிலையாக நின்று சிந்திக்க வேண்டும். (மல்.ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 439-440; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

தக்வாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு விளக்குகின்றார்கள்: நாம் எந்த விஷயத்துடன் அனுப்பப்பட்டுள்ளோம் என்றால் இறையச்சத்தின் களம் வெறுமையாக உள்ளது. தக்வாவை மேற்கொள்ள வேண்டும். வாளேந்தக் கூடாது. அது தடுக்கப்பட்டதாகும். நீங்கள் தக்வாவை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருந்தால் முழு உலகமும் உங்களுடன் இருக்கும். எனவே, தக்வாவை மேற்கொள்ளுங்கள். எவர்கள் மது அருந்துகின்றார்களோ அவர்களுக்கு தக்வாவில் எந்தப் பங்குமில்லை. அவர்கள் நன்மைக்கு எதிராக போராடுகின்றார்கள். அல்லாஹ் நமது ஜமாஅத்திற்கு தீமைக்கு எதிராகப் போரிடும் நற்பேறு வழங்கினால் அவர்களுக்கு தக்வா மற்றும் தூய்மையின் களத்தில் முன்னேற்றம் வழங்கினால் அதுவே அவர்களின் நற்பேறு ஆகும்.

இக்காலத்தில் முழு உலகத்திலுள்ள மார்க்கத்தையும் பாருங்கள். இறையச்சமின்றி காணப்படுகின்றது. உலக செல்வாக்குகளே நோக்கமாக ஆக்கப்பட்டுள்ளன. உண்மையான இறைவன் மறைந்திருக்கின்றான். உண்மையான இறைவன் எள்ளி நகையாடப்படுகின்றான். ஆனால், இப்போது இறைவன், தான் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவன் விரும்புகின்றான். எவர்கள் உலகத்தை இறைவனாக கருதுகின்றனரோ அவர்கள் ஒருபோதும் இறை நம்பிக்கையாளர்களாக ஆக முடியாது. (மல்.ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 387-358; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இறைவனுடைய மிகக் கடுமையான தண்டனை வர இருக்கின்றது. அன்னார் மாபெரும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். அந்த தண்டனை தீயவர் மற்றும் நல்லவருக்கு இடையே பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அது உங்களுக்கு தனித்தன்மையை வழங்கும். உங்கள் உள்ளங்களில் எந்த வித்தியாசமும் வந்து விடக் கூடாது. ஒருவர் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று உடன்படிக்கை செய்கின்றார். ஆனால், செயலினால் அதன் உண்மையை நிரூபிக்கவில்லை என்றால் இறைவன் அப்படிப்பட்ட நபரை எவ்வகையிலும் பொருட்படுத்த மாட்டான். அப்படிப்பட்ட ஒருவரல்ல 100 பேர் மரணித்தாலும் கூட அவர் தம்மிடம் மாற்றத்தை உருவாக்கவில்லை என்றே நாம் கூறுவோம். அவர் இருணை அகற்றி உள்ளத்திற்கு உறுதியையும் இன்பத்தையும் வழங்குகின்ற அந்த உண்மை மற்றும் இறை ஞானத்தின் ஒளியிலிருந்து விலகி தொலைவில் சென்று விட்டார். அதனால் அழிந்து விட்டார். (மல்.ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 71 அடிக்குறிப்பு, 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, உலகின் இன்றைய நிலையும் கூட இந்தக் கவலையை நமக்கு ஏற்படுத்துகின்றது. உலகின் முடிவு என்னவாகப் போகின்றது? என சிந்திக்கத் தோன்றுகிறது. கடந்த நாட்களில் ஒருவர் கூறினார். மிக வேகமாக உலகம் அழிவின் பக்கம் செல்கின்றது. நமது நிலை என்னவாகும்? அதற்கு நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு கவிதையையே பதிலாகக் கூறினேன். நெருப்பு உள்ளது. ஆனால் அந்த நெருப்பிலிருந்து எவர்கள் அற்புதமிக்க இறைவனின் மீது நேசம் கொண்டிருப்பார்களோ அவர்கள்தான் காப்பாற்றப்படுவார்கள் (துர்ரே ஸமீன் உருது பக்கம் 154) என்பதே அந்தக் கவிதையாகும்.

எனவே, இதுதான் உண்மையாகும். நாம் அல்லாஹ்வுடன் நமது தொடர்பை உறுதிப்படுத்த வேண்டும். எங்கு அல்லாஹ் உடைய கடமைகளை செலுத்த வேண்டுமோ அங்கு அவனுடைய அடியாருடைய உரிமைகளையும் வழங்க வேண்டும். இறைவன் கூறிய வழிமுறைகளுக்கேற்ப அமைந்துள்ள செல்வங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சி செய்யுங்கள். எந்தத் தீமைகள் எல்லாம் இறைவன் பார்வையில் தீமையாக இருக்கின்றதோ அந்த தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சி செய்யுங்கள். அதனை இறைவன் திருக்குர்ஆனில் நமக்கு தெளிவாக எடுத்துரைத்து விட்டான்.

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொண்ட பிறகு கொள்கை அளவிலும் செயல் அளவிலும் உறுதியிலும் உறுதி வாய்ந்தவர்களாக நாம் ஆக வேண்டும். இந்த விஷயங்கள் தான் நமக்கு இரட்சிப்பைப் பெற்றுத் தரும். இந்த விஷயங்கள் தான் அல்லாஹ்விற்கும் விருப்பத்திற்குரிய விஷயங்களாகும். இல்லையென்றால் 50 வருடங்கள், 70 வருடங்கள், 100 வருடங்கள் போன்ற ஜமாஅத்தில் நடக்கும் விழாக்கள் எல்லாம் எவ்வகையிலும் பயன் அளிக்காது. எந்தப் புரட்சியுமின்றி அது வீணானதாகும். உலகவாதிகள் இவ்விஷயங்களில் மகிழ்ச்சி அடைகின்றனர். ஆனால், மார்க்க வாதிகள் மகிழ்ச்சி அடைவதில்லை.

நாங்கள் அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுவதில் முன்னேற்றம் கண்டுள்ளோம். மேலும் அவற்றில் முன்னேறுவோம் என்ற அடிப்படையில் இந்த மகிழ்ச்சிகள் கொண்டாடப்படும் என்றால் அந்த மகிழ்ச்சி மற்றும் கொண்டாட்டங்கள் ஆகுமானதாகும். ஆனால் நமது பாதங்கள் எல்லா வகையான நன்மைகளில் முன்னேறுவதற்குப் பகரமாக நின்று விட்டது என்றால் அல்லது பின்னோக்கிச் செல்கின்றதென்றால் பின்னர் அது கவலைக்குரிய விஷயமாகும். எனவே, நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய விஷயங்களைக் கருத்தில் கொண்டவாறு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையின்படி செயல்பட வேண்டும். இன்னும் சொல்லப்போனால் நம்மை நாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எப்போதும் இந்த ஆய்வை செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் 75 ஆண்டுகள் நிறைவடையும்போது நாம் என்ன நடவடிக்கையை மேற்கொண்டோமோ அதில் நாம் நிலைபெற்று விட்டது மட்டுமின்றி அதில் நாம் முன்னேறியும் உள்ளோம் என்று நம்மால் கூற முடியும். அல்லாஹ் அனைவருக்கும் அதற்குரிய பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

நான் இதற்கு முன்பும் கூறி விட்டேன். ஜல்ஸாவின் இந்த நாட்களை துஆவில் கழியுங்கள். ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளில் முழுமையாக பங்கு பெறுங்கள். அதுவே ஜல்ஸாவின் நோக்கமாகும். அல்லாஹ் அதற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

# திருக்குர்ஆனின் போதனை அமைதி மற்றும் சாந்தியின் போதனையாகும் என்பதை உங்களுக்கு நான் உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன்

## 30 ஆகஸ்டு 2016 -ல் ஜெர்மனியிலுள்ள Frankenthal நகரில் மஸ்ஜிது நூரின் அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் தஸ்மிய்யா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அனைத்து விருந்தினர்களுக்கும், ஜமாஅத் சகோதரர்களுக்கும் எனது ஸலாத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. அல்லாஹ் அனைவரையும் அமைதியுடனும், சாந்தியுடனும் இருக்கச் செய்வானாக!

இன்று, இந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்த சகோதரர்களுக்கும் இங்கு ஒரு பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கிக் கொண்டிருக்கின்றான். இந்தப் பள்ளிவாயில் கட்டப்படும் - இன்ஷா அல்லாஹ். இது கட்டப்பட்ட பிறகு இதன் நோக்கங்கள் நம் முன்னால் மேலும் தெளிவாக வரும். இதைப் பற்றி இந்தப் பள்ளிவாயிலின் துவக்க நிகழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறப்படும் - இன்ஷா அல்லாஹ். ஜெர்மன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமீர் சாஹிப் அவர்கள் இந்த நகரத்தின் தனிச் சிறப்புகளை எடுத்துக் கூறியவாறு இந்த நகரிலுள்ள மக்கள் மிகவும் திறந்த உள்ளம் படைத்த மக்கள் ஆவர். இங்கு மதங்களுக்கு இடையிலுள்ள உரையாடல்கள் அதிகமாக நடக்கின்றன. அதில் அனைவரும் கலந்து கொள்கின்றனர் என்று கூறினார்கள்.

இந்த சிறப்புத்தன்மை எத்தகையதென்றால் சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஓர் அடிப்படையான விஷயமாக அது இருக்கின்றது. இதன் அடிப்படையில் இந்த நகரத்திலுள்ள மக்கள் சகிப்புத்தன்மையை கொண்டவர்களாகவும் இருக்கின்றனர் என்பதைக் கேட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. பல மதங்களைப் பின்பற்றுபவர்களாக அவர்கள் இருந்தும் கூட மதம் தொடர்பாக ஒருவர் மற்றவர் கூறும் விஷயங்களைக் கேட்பவர்களாகவும் அம்மக்கள் இருக்கின்றனர். அவற்றைக் கேட்ட பிறகு பகைமை, காழ்ப்புணர்ச்சி, சண்டை சச்சரவுகள் ஆகியவற்றை தூண்டுவதற்குப் பகரமாக இதற்குப் பிறகும் கூட அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடனும், நேசத்துடனும் இருப்பவர்கள் ஆவர். சகிப்புத்தன்மையைக் கொண்டவர்களாக அவர்கள் இருப்பர். எனவே, இது இந்த நகரிலுள்ள மக்களின் ஒரு மிகப்பெரும் சிறப்பாகும். இதற்காக நான் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துடன் அமீர் சாஹிப் அவர்கள் கூறியது போன்றே இங்குள்ள கவுன்ஸிலும் குடிமக்களும் பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக அதிகமாக தங்களது ஒத்துழைப்பை நல்கியுள்ளனர். இந்த விஷயமும் கூட உங்களது பரந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியில் பல இடங்களில் பள்ளிவாயிலைக் கட்டுகின்றது. பெரிய நகரங்களிலும் சிற்றூர்களிலும் அது பள்ளிவாயிலை கட்டுகின்றது. ஆனால், பெரும்பாலான இடங்களில் ஏதாவதொரு வடிவத்தில் உள்ளூர் மக்கள் இதை எதிர்க்கின்றனர். இந்த வகையில் அவர்கள் உண்மையின் பக்கமே நிற்கின்றனர். இன்று இஸ்லாம் தொடர்பாக நிலவும் கருத்துக்கள் அவர்களின் பாதுகாப்பு, அபாயத்தில் இருப்பதை அவர்களுக்கு உணர்த்துகின்றது. அந்தப் பாதுகாப்பு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காக இந்த நகரில் பள்ளிவாயில் கட்டப்பட்டால் அல்லது முஸ்லிம்கள் வந்து விட்டால் மேலும் இங்கு வந்து அவர்கள் காலூன்றி விட்டால் ஒருவேளை நமது நகரத்தில் நாம் வாழும் பகுதியில் அமைதி அழிந்து விடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால், தாவூத் மஜோகா சாஹிப் அவர்கள் தமது அறிமுக சொற்பொழிவில் குறிப்பிட்டது போன்றே அஹ்மதிய்யா ஜமாஅத் எத்தகைய ஒரு ஜமாஅத் என்றால், அது நிறுவப்பட்டதே அமைதியையும், சாந்தியையும், அன்பையும் பரப்புவதற்கேயாகும். உண்மையில் இஸ்லாத்தின் போதனையின் சுருக்கத்தை எடுத்துக் கூறுவதாக இருந்தால் மேலும் திருக்குர்ஆனின் போதனைகளை இரண்டு சொற்றொடர்களில் எடுத்துக் கூறுவதாக இருந்தால் அது, உங்களைப் படைத்த இறைவனுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். மேலும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்காக முழுமையாக முயற்சி செய்யுங்கள். அதற்குரிய உரிமையைச் செலுத்துங்கள். எனவே, பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருக்குரிய உரிமையைச் செலுத்துவதன் பக்கம் கவனம் ஏற்பட்டால் எந்தவோர் இடத்திலும் உண்மையான முஸ்லிம் குழப்பத்தை உருவாக்குவதற்கு காரணமாக இருக்கவே முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகவும் ஏற்றுள்ளோம். அவர்களை அல்லாஹ் இவ்வுலகில் அனுப்பியதற்கான காரணம் உலகில் குழப்பம் நிலவுகின்றது. அந்தக் குழப்பத்தை உண்மையான இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் முடிவுக்குக் கொண்டு வருவதே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குறிக்கோளாக இருந்தது. இதற்காகவே அவர்கள் இந்த ஜமாஅத்தை நிறுவினார்கள். தனது ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கும் அவர்கள் இந்தப் போதனையைத்தான் வழங்கினார்கள். அதாவது அடியார்களை அவர்கள் அவர்களைப் படைத்த இறைவனின் பக்கம் கொண்டு வர வேண்டும். அவனை வணங்குவதற்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். மேலும், அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்தியவாறு தனது அனைத்து தகுதிகளையும் இதற்காக பயன்படுத்த வேண்டும். இந்தப் பணியில் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஜமாஅத்திடம் கூறினார்கள். எனவே, இந்தக் குறிக்கோள்தான் ஒவ்வோர் அஹ்மதியின் குறிக்கோளாகும். இது குறிக்கோளாக இருக்கும்போது எவருக்கும் இஸ்லாத்தின் போதனையால் அபாயம் இருப்பதற்கான எந்தக் காரணமும் இருக்க முடியாது. எனினும், எவர்கள் இஸ்லாத்தின் பெயரில் தவறான காரியங்களில் ஈடுபடுகின்றனரோ அந்த மக்களால் ஆபத்து இருக்கின்றது. ஆனால், நான் உங்களுக்கு உறுதி கூறுகின்றேன். இந்த நகரத்தைச் சார்ந்த அஹ்மதி அல்லாத, முஸ்லிம் அல்லாத பல விருந்தினர்களும் இங்கு எனக்கு முன்னால் அமர்ந்திருக்கின்றனர். நான் உங்களுக்கு உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அல்லாஹ்வின் வேதமாகிய திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த இஸ்லாத்தையே ஏற்றுக் கொண்டிருக்கின்றது. திருக்குர்ஆனின் போதனைகளில் கடுமை காட்டுங்கள்; அநீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்று எழுதப்படவில்லை. மாறாக, அது அமைதி மற்றும் சாந்தியின் போதனையாகும்.

இறை இல்லமான கஅபா முஸ்லிம்களின் எத்தகைய ஓர் இடம் என்றால், அங்கு மக்கள் இறைவணக்கம் புரிவதற்காக ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் இன்னும் சொல்வதென்றால் கோடிக்கணக்கில் அங்கு ஒன்று கூடுகின்றனர். மக்கள் உம்ரா செய்கின்றனர். ஒரு வருடத்தில் இலட்சக்கணக்கான மக்கள் ஹஜ்ஜும் செய்கின்றனர். இன்னும் சில நாட்கள் கழிந்த பிறகு மீண்டும் ஹஜ் ஆரம்பமாகி விடும். ஹஜ்ஜின் நாட்கள் வருகின்றன. இறை இல்லமான கஅபாவில் நடைபெறும் ஹஜ்ஜின் நோக்கமே இங்கிருந்து அமைதி மற்றும் சாந்தியின் தூதுச் செய்தி பரவ வேண்டும் என்பதேயாகும். ஆனால், சில சுயநலக்காரர்கள் இந்த தூதுச் செய்தியைப் பரப்புவதற்குப் பகரமாக இதன் மூலமாக தங்களது சுய பலன்களைப் பெற ஆரம்பித்து விட்டனர். இதன் காரணமாக துரதிருஷ்டவசமாக முஸ்லிம்கள் அமைதியையும், சாந்தியையும் பரப்புவதற்குப் பகரமாக சில இடங்களில் அவர்கள் குழப்பங்களுக்கு காரணமாக ஆகிக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் அல்லாதவர்கள் மீது இதன் தீய தாக்கம் ஏற்படுகின்றது. ஆனால், எந்நிலையிலும் இவ்வாறே நடக்க வேண்டியதிருந்தது. ஏனென்றால், ஒரு காலத்தில் இஸ்லாத்திற்கு ஏற்ப செயல்படாத நிலை ஏற்படும். திருக்குர்ஆனின் போதனைகளை மக்கள் மறந்து விடுவர். அப்போது அல்லாஹ் ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவான்; வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்புவான்; வாக்களிக்கப்பட்ட மஹ்தியை அனுப்புவான். அந்த மஹ்தி இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகில் மீண்டும் நிலைபெறச் செய்வார் என்ற முன்னறிவிப்பு இருந்தது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்தப் பணியைச் செய்து வருகின்றது. அல்லாஹ்வின் அருளால் இங்கு லஜ்னா பெரும் பணிகளைச் செய்துள்ளனர் என்று அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள். இதுவும் கூட இஸ்லாமிய போதனைகளின் ஒரு பகுதியாகும். இது இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். ஆண்களின் நிழலிலிருந்து வெளியேறி பெண்கள் தங்களது கடமைகளையும் நிறைவேற்றுகின்றனர். குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளையும் பிள்ளைகளின் சீர்திருத்தம், பிறருக்கு தப்லீக் செய்ய வேண்டிய கடமைகள் ஆகியவற்றையும் கூட அவர்கள் தமது வட்டத்தில் இருந்தவாறு நிறைவேற்ற வேண்டும். கல்வியையும் பெற வேண்டும் என்று இஸ்லாம் அவர்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றது. இந்தக் கட்டளையின் காரணமாக நமது பெண்களின், கல்வி

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Vol. 1 Thursday 10 NOVEMBER 2016 Issue No. 36

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

கற்பவர்களின் எண்ணிக்கை உலகின் சில பகுதிகளில் ஆண்களை விட அதிகமாக இருக்கின்றது. ஜெர்மனி வளர்ச்சி அடைந்த ஒரு நாடாகும். உலகில் பல ஏழை நாடுகள் இருக்கின்றன. அங்கு கல்வி கற்பதற்கான வசதியில்லை. மிகவும் கஷ்டப்பட்டுதான் அங்கு கல்வி கற்கும் நிலை இருக்கின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்க முடியவில்லை. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் உள்ள பிள்ளைகள் அல்லாஹ்வின் அருளால் கல்வி கற்கின்றனர். இதில் நமது சிறுமிகளும், பெண்களும் சில இடங்களில் பையன்களை விட அதிகமாக கல்வி கற்றவர்களாக இருக்கின்றனர். இது இஸ்லாம் பெண்களுக்குரிய உரிமையைத் தருவதில்லை என்ற விஷயத்தையும் மறுக்கின்றது. இஸ்லாத்தில் பெண்களுக்குரிய உரிமைகள் தொடர்பான வியக்கத்தக்க முன்னுதாரணங்கள் இருக்கின்றன. இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் எந்தப் பெண்கள் தமது பெண் குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்குவார்களோ அத்தகைய பெண்களுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் உயர்வான அந்தஸ்தை வழங்குவான் என்று கூறியுள்ளார்கள். எவர்கள் இந்த உலக வாழ்விற்குப் பிறகு இன்னொரு வாழ்க்கை இருக்கின்றது என்ற உறுதியில் நிலைத்து நிற்கின்றார்களோ அவர்களுக்கு இது மாபெரும் கண்ணியமாக இருக்கின்றது. ஆண் குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்கப்படுகின்றது என்றால் அந்த விஷயமும் மிகவும் அவசியமான ஒன்றாகும். ஏனென்றால், அவர்களை சமுதாயத்தின் ஒரு சிறந்த அங்கமாக உருவாக்க வேண்டியது இருக்கின்றது. ஆனால், பெரும்பாலான ஆண் பிள்ளைகள் பெற்றோர்களுக்கு இந்த உலகிலும் கூட பொருளாதார பயன்களைத் தருவதற்குரிய ஒரு வழியாக ஆகி விடுகின்றனர். குறிப்பாக நமது சமுதாயத்தில் அல்லது கூட்டுக் குடும்பத்தின் வழிமுறை இருக்கின்ற மூன்றாவது உலக நாடுகளில் ஆண் பிள்ளைகள் தமது பெற்றோர்களுக்கு தொண்டு செய்பவர்களாக இருக்கின்றனர். இந்த உலகில் ஒரு உலகப் பயனை அவர்களுக்கு தருபவர்களாக அவர்கள் இருக்கின்றனர். தமது பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத்தை வழங்குகின்ற தாய்க்கும் தந்தைக்கும் இந்தப் பயன் இந்த உலகிலேயே அவர்களுக்குக் கிடைத்து விடுகின்றது. ஆனால், பெண் பிள்ளை திருமணமாகி இன்னொரு வீட்டிற்குச் சென்று விடும்போது அவருடைய பயன் நேரடியாக அவருடைய தாய்க்கு கிடைப்பதில்லை. ஆனால், மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை இருக்கின்றது என்பதில் உங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தால் நீங்கள் மறுவுலகம் சென்ற பிறகும் கூட உங்களுக்கு அங்கு நான் கண்டிப்பாக நற்பலன்களைத் தருவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

பிறகு, இஸ்லாம் ஒரு பெண்ணுக்கும் அவள் ஒரு தாய் என்ற நிலையில் அவளது காலடிகளில் சுவர்க்கம் இருக்கின்றது என்று கூறுகின்றது. அதாவது, பெண்ணின் மூலமாக சுவர்க்கத்திற்கான உத்திரவாதம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், ஒரு பெண் தமது ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் சிறந்த தர்பிய்யத்தை வழங்கி அவர்களை சமுதாயத்தின் செயல் துடிப்புள்ள அங்கமாக ஆக்குகின்றாள். அவர்கள் குழப்பம் விளைவிப்பவர்களாகவும், இழப்பையும் சேதத்தையும் ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பதற்குப் பகரமாக இந்தப் பெண்கள் அவர்களுக்கு வழங்குகின்ற தர்பிய்யத்தின் விளைவாக நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் நேர்மறையான ஒரு பங்கை செலுத்துபவர்களாக அவர்கள் ஆகி விடுகின்றனர். சமுதாயத்தின் செயல் துடிப்புள்ள ஓர் அங்கமாக அவர்கள் ஆகி விடுகின்றனர். எனவே, நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்குங்கள். அதன் மூலம் ஆண்களும் பெண்களும் உங்களது சமுதாயத்தின் எத்தகைய ஓர் அங்கமாக ஆகிவிட வேண்டும் என்றால், அந்த சமுதாயத்திலிருந்து அன்பு, நேசம் மற்றும் அமைதி பரவ வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பதன் மூலம் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள இந்த உயரிய அந்தஸ்தைப் போன்ற ஓர் அந்தஸ்தை ஆண்களுக்கு வழங்கவில்லை என்பது தெரிய வருகிறது. இந்த தர்பிய்யத்தின் மூலம் உங்களது நகரமும், உங்களது சிற்றூரும் உங்களது நாடும் முன்னேற்றமடைகின்றது. அதன் மூலம் நீங்கள் உலகில் அமைதியை நிலைநாட்டுபவர்களாக ஆகி விடுவீர்கள். எனவே, இதுதான் இஸ்லாத்தின் போதனைகளில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தின் அழகாகும். இதன் ஒரு தோற்றத்தைத் தான் இப்போது நான் உங்களுக்கு காட்டியிருக்கின்றேன்.

*(தொடரும்...)*

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

*ஒருவர் நான் நல்லெண்ணத்தினால் பொய்ப்படுத்துகின்றேன் என்ற இந்தக் காரணத்தைக் கூற முடியாது. இந்த ஓரிறைமை பற்றிய விஷயங்களையும் தூதுத்துவத்தையும் புரிந்து கொள்வதற்கு தகுதியுடையதாக அவரது புலன்கள் உள்ளனவா ? என்பதைப் பார்க்க வேண்டும். அவரால் அதனைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் அவர் அதனை பொய்ப்படுத்துகின்றார் என்பது தெரிய வரும்போது நாம் அவரை தகுந்த காரணத்தைக் கூறுபவராகக் கருத முடியுமா ? இவ்வாறே எவர்கள் தெரிந்து கொண்டே வறட்டு வாதங்களைச் செய்கின்றனரோ, மேலும் இஸ்லாத்தின் ஆதாரங்களைத் தகர்க்க முடியாமல் இருக்கின்றனரோ அவர்களைப் பற்றி அவர்கள் தகுந்த காரணங்களைக் கூறுபவர்களாக இருக்கின்றனர் என்று நாம் கருத முடியுமா ? இஸ்லாம் ஓர் உயிருள்ள மார்க்கமாகும். எந்த நபரால் உயிருள்ளவர் மற்றும் மரணித்தவர் ஆகியோருக்கு இடையிலுள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள முடியுமோ அவர் ஏன் இஸ்லாத்தை கை விட்டு விட்டு மரணித்துப் போன மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் ? இறைவன் இந்தக் காலத்திலும் கூட இஸ்லாத்திற்கு ஆதரவாக பெரும் பெரும் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான். இதைப் பற்றி நானே அனுபவமுள்ளவனாக இருக்கின்றேன். நான் பார்க்கின்றேன். எனக்கு எதிரில் உலகிலுள்ள எல்லா சமுதாயங்களும் ஒன்று சேர்ந்து எவருக்கு இறைவன் மறைவான செய்திகளைப் பற்றி தெரிவிக்கின்றான் ? எவரது துஆக்களை அவன் ஏற்றுக் கொள்கின்றான் ? எவருக்கு உதவி செய்கின்றான் ? எவருக்காக பெரும் பெரும் அடையாளங்களைக் காட்டுகின்றான் ? என்ற இந்த விஷயத்தில் என்னுடன் போட்டி போடுகின்ற பரீட்சை நடைபெற்றால் அதில் நானே வெற்றி பெறுவேன் என்று நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந்த பரீட்சையில் என்னுடன் போட்டி போட எவராவது இருக்கின்றாரா ? இஸ்லாம் மார்க்கம் உண்மையானது என்பதை எதிரிகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் ஆயிரக்கணக்கான அடையாளங்களை இறைவன் எனக்கு வழங்கியுள்ளான். நான் எனது எந்தவொரு கண்ணியத்தையும் விரும்பவில்லை. மாறாக, எதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேனோ அதன் கண்ணியத்தையே நான் விரும்புகின்றேன். சில அறிவற்றவர்கள் இன்னின்ன முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை என்று கூறுகின்றனர். தமது அறியாமையினால் முன்னர் வந்த நபிமார்களின் காலத்தில் தீங்கு விளைவிக்கின்ற மனிதன் செய்தது போன்றே ஒன்றிரண்டு முன்னறிவிப்புகள் பற்றி குறிப்பிட்டு அவை நிறைவேறவில்லை என்று கூறுகின்றனர். ஆனால், அவர்கள் சூரியன் மீது எச்சில் உமிழ விரும்புகின்றனர். பொய் மற்றும் இட்டுக்கட்டிக் கூறுவதன் மூலம் தாம் கூறும் விஷயத்திற்கு மெருகூட்டி அவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களுக்கு இறைவனின் நடைமுறை பற்றி தெரியவில்லை. இறைவனது வேதங்கள் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை அல்லது எவருக்காவது அதைப் பற்றிய அறிவு இருந்தாலும் மறைமுகமாக தீங்கு விளைவிக்கும் அத்தகைய விஷயங்களையே அவர் பேசுகின்றார். அவர்களது பார்வையில் யூனுஸ் நபியும் பொய்யராவார். எவ்வித நிபந்தனையுமின்றி அவர்கள் செய்திருந்த உறுதியான முன்னறிவிப்பும் நிறைவேறவில்லை. ஆனால், ஆத்தம் மற்றும் அஹ்மது பேக்கின் மருமகன் தொடர்பாக நான் செய்திருந்த அந்த முன்னறிவிப்புகளை அவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுகின்றனர். அவை தமது நிபந்தனைகளின் அடிப்படையில் நிறைவேறி விட்டன. ஏனென்றால், அவற்றுடன் நிபந்தனைகள் இருந்தன. அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அவை நிறைவேறுவதில் தாமதம் ஏற்பட்டது. எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் கண்டிப்பாக நிறைவேற வேண்டும் என்பது கட்டாயமானதல்ல. இதில் எல்லா நபிமார்களுக்கும் ஒருமித்த கருத்து இருக்கின்றது. மேலும், நான் இது தொடர்பாக அதிகமாக எழுத விரும்பவில்லை. இவற்றைப் பற்றிய விளக்கங்கள் எனது நூல்களில் நிறைந்து காணப்படுகின்றன. ஆத்தம் முன்னறிவிப்பில் கூறப்பட்டதற்கேற்ப மரணித்து விட்டார். அஹ்மது பேக்கும் கூட முன்னறிவிப்பில் கூறப்பட்டதற்கேற்ப இறந்து விட்டார். இப்போது இவர்கள் அவரது மருமகன் தொடர்பாக அழுகின்றனர். மேலும் எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் தொடர்பாக இருந்து வருகின்ற அல்லாஹ்வின் நடைமுறையை அவர்கள் மறந்து விட்டனர். அவர்களிடம் வெட்கமும் நீதியும் இருந்தால் இரண்டு பட்டியல்களை அவர்கள் தயார் செய்ய வேண்டும். அவற்றில் ஒன்றில் அவர்களது அறிவிப்பிற்கேற்ப நிறைவேறாமல் இருக்கின்ற முன்னறிவிப்புகளை அவர்கள் எழுத வேண்டும். இரண்டாவது பட்டியலில் எவரும் மறுக்க முடியாத நிலையில் நிறைவேறியிருக்கும் அந்த முன்னறிவிப்புகளை நாம் எழுதுவோம். அப்போது மிகவும் தூய்மையாக இருக்கும் ஒரு நதிக்கு எதிரில் அவர்களது பார்வையில் தூயதாக இல்லாமல் இருக்கின்ற ஒரு துளியைத்தான் அவர்கள் எடுத்து வைக்கின்றனர் என்பது அவர்களுக்கு தெரிந்து விடும்.*

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 180-182)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad